செய்தி வெளியீடு எண்.473 நாள்.24.6.2008

செய்தி வெளியீடு

இன்று (24.6.2008) தஞ்சை மாவட்ட நீதிமன்றத்தின் 200 ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்க தஞ்சை ரயில் நிலையம் வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை, மாண்புமிகு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் அவர்கள், மாண்புமிகு மத்திய வனத்துறை இணை அமைச்சர் திரு.இரகுபதி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.விஜயகுமார் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.விஜயன் அவர்கள், தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எம்.ராஜேந்திரன் அவர்கள், தஞ்சை மாவட்ட முதன்மை நீதிபதி திரு.எம்.முகமது ஜஃப்ருல்லாகான் மற்றும் பட்டுக்கோட்டை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரங்கராஜன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் சால்வை அணிவித்தும், பூங்கொத்து கொடுத்தும், மேளதாளத்துடன் வரவேற்பு கொடுத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் சென்னையிலிருந்து, மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆ.ராசா அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆகியோர் உடன் வந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.